# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 5061 / 2010 / எம்சி. 8 நாள் : 31.5.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 01.06.2010 செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 2

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம்
# ஜுன் 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை சாலையின் மையத்தில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயரமுள்ள தெருமின்விளக்கு கம்பங்கள் மற்றும் 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் அமைத்தல் பணியினை கோவை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளுதல் - அரசாணை பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக. |
| 2 | பொறியியல் பிரிவு - அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணி – ஒப்பந்தப் புள்ளி கோரியது – மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் பகுதிகளில் தனியார் பங்களிப்புடன் பயணியர் நிழற்குடை அமைத்தல் பணி – விருப்பக் கேட்பு அறிக்கை கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 4 | நகரமைப்புப் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கிழக்கு மண்டலம் - தனியார் பங்களிப்புடன் பயணியர் நிழற்குடை அமைத்தல் பணி – விருப்பக் கேட்பு அறிக்கை கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 5 | கல்விப்பிரிவு - பொதுத் தேர்வில் 2010-ல் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் 10 இடங்களைப் பெற்ற 24 மாணவியர்களுக்கு மடிக்கனிணி வழங்குவது - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு - சாலை மைய தடுப்பு சுவர்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், சாலையோரப்பூங்கா அமைத்தல், அலங்கார விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் - தனியார் பங்களிப்புடன் விருப்பு கேட்பு அறிக்கை கோருதல் முதலியன – பணிகள் குழுவிற்கு அதிகாரம் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 7 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ் செம்மொழி மாநாடு 2010, 60' திட்டச்சாலை – நவ இந்தியா சாலை திட்டசாலை– சின்னசாமி சாலையிலிருந்து ஆவாரம்பாளையம் சாலை வழியாக அவினாசி சாலை சேருதல் - A2' – A2' சாலை சந்திப்பில் இடையூறாக உள்ள தமிழ்நாடு அரசு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், சத்துணவுமையம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) அப்புறப்படுத்தி மாற்று இடத்திற்கு கொண்டு செல்லுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

நன்றியுரை

அ) திருக்குறள்

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(குறள் 20)

விளக்கம்

உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

திருவள்ளுவர்.

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோவை 2010 – அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை சாலையின் மையத்தில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயரமுள்ள தெருமின்விளக்கு கம்பங்கள் மற்றும் 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் அமைத்தல் பணியினை கோவை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளுதல் - அரசாணை பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (ப) எண்.231 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 10-05-2010
2. 14.05.2010 அன்று நடைபெற்ற மாநகர மேம்பாட்டு குழுவின் கூட்ட நடவடிக்கை குறிப்பு.
3. 24-05-2010 அன்று உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு தனிஅதிகாரி, நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாநகராட்சி ஆணையரின் பணி ஆய்வின்போது எடுக்கப்பட்ட முடிவு.

----------------

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோவை 2010 – அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை சாலையின் மையத்தில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயரமுள்ள தெருமின்விளக்கு கம்பங்கள் மற்றும் 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ 57.00 இலட்சம் மானிய நிதி ஒதுக்கீடு செய்து கோவை மாநகராட்சி மூலம் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மேம்பாட்டுக்குழு கூட்டம் வணக்கத்திற்குரிய மேயர் தலைமையில் 14-05-2010-ல் நடைபெற்றதில் அவினாசி சாலையில் ஏற்கனவே மாநகராட்சி மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் பறவையின் இறக்கை வடிவ (Seal Safe Fittings) தெருமின்விளக்குகள் போலவே இப்பணியிலும் அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

மேலும், கடந்த 24-05-2010 அன்று உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு தனிஅதிகாரி, நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாநகராட்சி ஆணையரின் பணி ஆய்வின்போது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு பிரதான சாலையாக விளங்கும் அவினாசி சாலையில் மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டு வரும் தெருமின்விளக்குகள் போலவே ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் எனவும், இப்பணியை உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு முன்பாக முடிக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு குறைந்த கால அவகாசமே உள்ளதாலும் விரைந்து இப்பணியை முடிக்க அறிவுறுத்தப்பட்டது. இதன்பேரில் இப்பணிக்கு ரூ 75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு மான்யம் ரூ 57.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ18.00 இலட்சத்திற்கு காளப்பட்டி பேரூராட்சி மற்றும் நமக்கு நாமே திட்டத்தில் ஈடு செய்ய அறிவுறுத்தப்பட்டது. இதன்பேரில் காளப்பட்டி பேரூராட்சி ரூ6.00 இலட்சம் மாநகராட்சிக்கு செலுத்தவும், மீதமுள்ள ரூ12.00 இலட்சத்திற்கு நமக்கு நாமே திட்டத்தில் நிதி வழங்க மாவட்ட நிர்வாகத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-ல் அத்தியாயம் 4 வரிசை எண்.14 விதி 9-ல் ஒரே மாதிரியான இனங்கள் கொண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகையில் 25 சதவிகிதத்திற்கும் மிகாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் அதிகாரி அனுமதி வழங்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, மாநகராட்சி மூலம் அவினாசி சாலையில் டாக்டர் நஞ்சப்பா சாலை முதல் சித்ரா (விமானநிலைய சாலை சந்திப்பு) வரை புதியதாக சாலை மைய விளக்குகள் 275 எண்ணிக்கை 10 மீட்டர் உயரமுள்ள எட்டுபட்டையுடன் கூடிய மின்கம்பங்கள் மற்றும் 2X 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் மற்றும் 8 எண்ணிக்கை 16மீட்டர் உயரமுள்ள உயர்மட்ட கோபுர (2X 400 வாட்ஸ்) விளக்குகள் அமைத்தல் பணியினை மாநகராட்சி மூலம் தி/ ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன்பேரில் அவசர அவசியம் கருதியும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு இன்னும் குறுகிய கால அவகாசம் மட்டுமே இருப்பதனாலும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000, விதி 9-ன்படி ஏற்கனவே மாநகராட்சி மூலம் அவினாசி சாலையில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு வரும் மதிப்பீட்டுத் தொகை ரூ 300.00 இலட்ச மதிப்பீட்டு பணியில் தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை அவர்களை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே கூடுதல் மதிப்பீட்டுத் தொகை ரூ75.00 இலட்சத்திற்கான பணியினை செய்யுமாறு 24-05-2010-ல் கடிதம் மூலம் கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் தமது 25-05-2010-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே கூடுதல் இனங்களையும் செய்துதருவதாக கடிதம் அளித்துள்ளார், எனவே, மேற்படி அரசாணையை பதிவு செய்யவும், மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கவும், அரசு மானியத் தொகை போக கூடுதல் தொகை ரூ 18.00 இலட்சத்தில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் செலவாகும் தொகை ரூ 12.00 இலட்சம் போக மீதமுள்ள தொகையை காளப்பட்டி பேரூராட்சி மூலம் பெற மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அரசாணை (ப) எண்.231 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 10-05-2010 பதிவு செய்யலாம்.
2. தி/ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தாரை அவினாசி சாலை, காளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை சாலையின் மையத்தில் இரு கைகள் கொண்ட தெருவிளக்குகள் அமைத்தல் பணியினை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.
3. அரசு மானியத் தொகை போக கூடுதல் தொகை ரூ 18.00 இலட்சத்தில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் செலவாகும் தொகை ரூ 12.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ 6.00 இலட்சம் காளப்பட்டி பேரூராட்சியிலிருந்து பெறலாம்.

ந.க.எண்.2553/2010/எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 01.06.10</u>

1. அரசாணை (ப) எண். 231 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 10.05.2010 பதிவு செய்யப்பட்டது.

2. அலுவலகக் குறிப்பு 2 மற்றும் 3 ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சியில் தற்பொழுது புதிதாக அகலப்படுத்தப்பட்டுள்ள அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் இல்லாததால் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | ந.க.எண் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 426/2010/எம்.டி.3 | 30. 50 |
| 2 | 427/2010/எம்.டி.2 | 43. 53 |
| 3 | 428/2010/எம்.டி.2 | 43. 53 |
| 4 | 567/2010/எம்.டி.4 | 28. 40 |

இதன் தொடர்ச்சியாக பேருந்து நிழற்குடைகள் அமைக்க 23-02-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண்கள். 262, 263, 264, 265 நாள். 12-03-2010-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்நிறுவனத்திற்கு 12-03-2010 அன்று பணி தொடங்குவதற்கு அறிக்கை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-ல் அத்தியாயம் 4 வரிசை எண். 14 ன் கீழ் 9 விதியில் கூறப்பட்டுள்ள ஒரே மாதிரியான இனங்கள் கொண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகையில் 25% கூடுதலாக செய்ய ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் அதிகாரி இக்கூடுதலுக்கு அனுமதி வழங்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அவினாசி சாலையில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு கூடுதலாக மேலும் 4 பேருந்து நிழற்குடையினை ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலைவிகிதத்திலேயே அமைக்க தி/ள். ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை நிறுவனம். 31-05-2010 அன்று சம்மதக் கடிதம் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | ந.க.எண் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் | அனுமதி வழங்கப்பட்டுள்ள பேருந்து நிழற்குடைகளின் எண்ணிக்கை | துற்போது கூடுதலாக வழங்கப்படும நிழற்குடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 426/2010/எம்.டி.3 | 30. 50 | 4 | 1 |
| 2 | 427/2010/எம்.டி.2 | 43. 53 | 6 | 1 |
| 3 | 428/2010/எம்.டி.2 | 43. 53 | 6 | 1 |
| 4 | 567/2010/எம்.டி.4 | 28. 40 | 4 | 1 |

எனவே அவினாசி சாலையில் மேலும் 4 பேருந்து நிழற்குடையினை அமைப்பதற்கும் இப்பணியினை தி/ள். ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் அவர்களுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம், புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமையவிருக்கும் இடங்கள்: ஹோப்காலேஜ் பகுதியில் இரண்டு எண்ணிக்கை, லட்சுமிமில் சந்திப்பில் இரண்டு எண்ணிக்கை.

ந.க எண்: 426/2010/(எம்.டி2)எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 01.06.10</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 3</u>

பொருள்:- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி கோயம்புத்தூர் மாநகராட்சி உடன் இணைந்து, கோயம்புத்தூர் மாநகர் சார்ந்து அமைந்துள்ள குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதிகளுக்கும் தனியார் பங்களிப்புடன் ஒரே வடிவிலான பயணியர் நிழற்குடை அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல் மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு 3 சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) மறு அழைப்பு கோரியது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை :- 1.மாமன்ற தீர்மானம் எண். 279. நாள். 19.03.2010
2.மாமன்ற தீர்மானம் எண். 305. நாள். 31.03.2010

* * *

பார்வை 1-ல் குறித்துள்ள மாமன்ற தீர்மானம் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளபடி கோயம்புத்தூர் மாநகராட்சி சார்ந்த, குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கவுண்டம்பாளையம் , நகராட்சி பகுதிகளிலும் கோவை மாநகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட உள்ள பேருந்து பயணியர் நிழற்குடை போன்று ஒரே வடிவிலான பயணியர் நிழற்குடைகள் அமைக்க மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் வழங்கிய ஆலோசனைப்படி, தனியார் பங்களிப்புடன் பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடை அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிகளுக்கு 21.05.2010-ம் தேதிய மறு அழைப்பின் மூலம் விருப்பு கேட்பு அறிக்கை கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண். | சிப்பம் எண் | நகராட்சி பகுதி | நிறுவனத்தின் பெயர் | கோரியுள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | VI | குறிச்சி நகராட்சி | தி/வா. டைம்ஸ் அட்வர்டைஸ் மற்றும், தி/வா. ஆஸ்கர் அவுட்டோர்ஸ், கோவை. | ரூ.9,000/- |
| 2 | VII | குனியமுத்தூர் நகராட்சி | தி/வா டைம்ஸ் அட்வர்டைஸ் மற்றும், தி/வா. ஆஸ்கர் அவுட்டோர்ஸ், கோவை. | ரூ.25,000/- |
| 3 | VIII | கவுண்டம்பாளையம் நகராட்சி | தி/வா. டைம்ஸ் அட்வர்டைஸ் மற்றும், தி/வா. ஆஸ்கர் அவுட்டோர்ஸ், கோவை. | ரூ.30,000/- |

மேற்குறித்தவாறு விருப்ப கேட்பு அறிக்கை தி/வா. டைம்ஸ் அட்வர்டைஸ் மற்றும், தி/வா ஆஸ்கர் அவுட்டோர்ஸ், கோவை. ஆகிய இரு நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து சிப்பம் VI-குறிச்சி நகராட்சி பகுதிக்கு ரூ. 9,000/-, சிப்பம்VII- குனியமுத்தூர் நகராட்சி பகுதிக்கு 25,000/-, மற்றும் சிப்பம்VIII-கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதிக்கு ரூ.30,000/-, என விருப்பு கேட்பு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த நிறுவனத்திற்கு பார்வை -2ல் குறித்துள்ள மாமன்ற தீர்மானத்தின் படியும், ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003-ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை அமைத்து பராமரிப்பு செய்யவும், மூன்று ஆண்டு முடிவிற்குப் பின் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதி அளிக்கலாம் ந.க.எண். 2524/2010/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 54 நாள் 01.06.10</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 4</u>

பொருள்:- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளில் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடைகள் அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல், மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல் திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு, மீதமுள்ள ஒரு சிப்பத்திற்கு விருப்பகேட்பு அறிக்கை (EOI) மறு அழைப்பு கோரியது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை :-1. மாமன்ற தீர்மான எண். 94. நாள். 30.09.2009
2. மாமன்ற தீர்மான எண். 305. நாள். 31.03.2010

* * *

பார்வை 1-ல் குறித்துள்ள மாமன்ற தீர்மானத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை கோர அனுமதி வழங்கி உள்ளதின் பேரில், தனியார் பங்களிப்புடன் பழைய பயணியர் நிழற்குடைகளை அகற்றிவிட்டு புதியதாக நவீன பயணியர் நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு 21.05.2010-ல் மீதமுள்ள சிப்பம் எண். IV-A, IV-B ஆகியவற்றிக்கு விருப்பு கேட்பு அறிக்கை மறு அழைப்பு கோரப்பட்டுள்ளதில் கிழ்கண்டவாறு விருப்பு கேட்பு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

| சிப்பம் எண். | நிறுவனத்தின் பெயர் | கோரியுள்ள தொகை |
|---|---|---|
| IV-A.<br>கிழக்கு மண்டலம் | தி / வா. டைம்ஸ் அட்வர்டைசர்ஸ் மற்றும்<br>ஆஸ்கர் அவுட்டோர்ஸ் , கோவை | ரூ. 3,35,000/- |
| IV-B.<br>கிழக்கு மண்டலம் | தி / வா. டைம்ஸ் அட்வர்டைசர்ஸ் மற்றும்<br>தி/வா ஆஸ்கர் அவுட்டோர்ஸ், கோவை | ரூ. 3,19,000/- |

விருப்பு கேட்பு அறிக்கை மறு அழைப்பில் தி/வா. டைம்ஸ் அட்வர்டைஸ் மற்றும் தி/வா. ஆஸ்கர் அவுட்டோர்ஸ் கோவை, ஆகிய இரு நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து சிப்பம் IV-A. க்கு ரூ. 3,35,000/-மும், IV-B.க்கு ரூ. 3,19,000/- என விருப்பு கேட்பு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த நிறுவனத்திற்கு பார்வை 2-ல் குறித்துள்ள மாமன்ற தீர்மானத்தின் படியும், ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003-ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை அமைத்து பராமரிப்பு செய்யவும், மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதி அளிக்கலாம் ந.க.எண். 5541/2009/எம்.எச்.5

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 01.06.10</u>

1. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முதலில் மூன்ற ஆண்டுகளுக்கு அனுமதிக்கவும் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மாமன்ற ஒப்புதலுடன் கால நீட்டிப்பு செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் தி / வா. டைம்ஸ் அட்வர்டைசர்ஸ் மற்றும் ஆஸ்கர் அவுட்டோர்ஸ் கோவை, நிறுவனத்தாருக்கு சிப்பம் IV.A, IV.B பணியினை ஒப்படை செய்ய அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

2. நீட்டிப்பு காலம் முடிவுற்றபிறகு மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 5</u>

பொருள் : கல்வி – கோவை மாநகராட்சி – மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு - பொதுத் தேர்வில் 2010-ல் முதல் 10 இடங்களைப் பெற்ற 24 மாணவியர்களுக்கு – கல்வி நிதியில் இருந்து – மடிக்கனிணி வழங்குவது சார்பாக.

----------

கோவை மாநகராட்சி கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு அவசரக்கூட்டம் 28.5.2010 அன்று நடைபெற்றபோது குழு உறுப்பினர்கள் கடந்த 2010-ல் நடைபெற்ற பொதுத் தேர்வில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்புகளில் முதல் 10 இடங்களை பெற்ற மாணவிகளுக்கு மடிக் கனிணி ( Lap Top ) வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

மேற்காண் மடிக்கனிணி கல்வி நிதியில் இருந்து வழங்க அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 3039/10/கே 6

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 01.06.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதிகளில் சாலை மைய தடுப்பு சுவர்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், சாலையோரப்பூங்கா அமைத்தல், அலங்கார விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் தனியார் பங்களிப்புடன் விருப்பு கேட்பு அறிக்கை (EOI) மூலமாக நிறைவேற்ற ஒவ்வொரு முறையும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் உடனுக்குடன் நிறைவேற்றுவதற்காக இனி மேற்கொண்டு அனைத்து விருப்பு கேட்பு அறிக்கை (EOI) மூலமாக பணிகள் நடைபெறுவதற்கு தேவைப்படும் இடங்களை தேர்வு செய்வது, விருப்பு கேட்பு அறிக்கைகள் கோருவது முதலான அனைத்து அதிகாரங்களையும் பணிகள் குழுவிற்கு மாமன்றம் வழங்குவதற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந .க.எண் 12359/2009/எம் டி3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 01.06.10</u>

இப்பொருள் தொடர்பான விரிவான விபரங்களுடன் மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – உலகத் தமிழ் செம்மொழி மாநாடு 2010, 60’ திட்டச்சாலை – நவ இந்தியா சாலை திட்டசாலை– சின்னசாமி சாலையிலிருந்து ஆவாரம்பாளையம் சாலை வழியாக அவினாசி சாலை சேருதல் - A2’ – A2’ சாலை சந்திப்பில் இடையூறாக உள்ள தமிழ்நாடு அரசு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், சத்துணவுமையம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) அப்புறப்படுத்தி மாற்று இடத்திற்கு கொண்டு செல்லுதல் - மன்றத்தின் அனுமதிக்கு.

-------------------

உலகத்தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் வரும் ஜீன் மாதம் நடைபெற உள்ளது. இம்மாநாட்டை ஒட்டி போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த திட்டச்சாலைகள் அமைத்து இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது. அதில் ஒரு இணைப்பு சாலை (60’ அகலம்) சின்னசாமி சாலை முதல் ஆவராம்பாளையம் சாலை வழியாக அவினாசிசாலை சென்றடைய அனுமதி அளித்து தற்பொழுது சாலை அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சின்னசாமி சாலையிலிருந்து துவங்கும் இணைப்பு சாலை (A2 A2 சாலை) சந்திப்பில் சமுக நலத்துறைக்கு சொந்தமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுமையம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் 2 சத்துணவு மைய கட்டிடங்கள் உள்ளது. மேற்கண்ட சத்துணவு கட்டிடத்தை அப்புறப்படுத்தினால் தான் சாலையை பயன்படுத்த இயலும்.

பணி ஆய்வின் பொழுது மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மேற்கண்ட சத்துணவு கூடத்தை அப்புறப்படுத்தி சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்கும்பட அறிவுரை கூறியிருந்தார். மற்றும் இந்த சத்துணவு கூடத்திற்கு மாற்று இடம் தேர்வு செய்யும்படியும் உத்திரவிட்டிருந்தார். அதன்படி இந்த சத்தணவு கூடத்தில் படிக்கும் குழந்தைகள் இந்தப்பகுதியிலுள்ள தனலட்சுமி நகர், கருப்பக்காள் தோட்டம் பகுதியிலிருந்து பள்ளிக்கு வந்து செல்லுகிறார்கள். இக்குழந்தைகள் அருகிலுள்ள சுமார் 600 மீட்டர் தூரத்திலுள்ள பாரதியார் சாலையில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உள்ளது. அதில் தற்காலிகமாக பயன் இல்லாமல் உள்ள இரண்டு ஒட்டுக் கூரையுடன் வகுப்பு அறைகளை சத்துணவு கூடமாக பயன்படுத்தலாம். மற்றும் அது குறித்து திட்ட அலுவலர் வகுப்பு அறைகளில் கூடுதலாக சமையல் அறை, பண்டக காப்பு அறை மற்றும் பழுதுப்பார்ப்பு பணிகள் செய்து கொடுக்கப்பட்டால் உடனடியாக காலி செய்து இந்த கட்டிடத்திற்கு சென்று விடுவதாக தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி மேற்கண்ட சத்துணவு கூடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், பாரதியார் சாலையில் உள்ள நடுநிலைப்பள்ளியில் ஒட்டுவில்லைக் கட்டிடத்தை தற்காலிகமாக பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் : 06499 / 10/D1(N)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 01.06.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி